**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 5 ✧ இதழ்-10 ✧ மே 2023

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜு**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**

தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org

# ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை வெற்றி!
# தமிழக அரசுக்கு நன்றி!!

**01.12.2019** முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வு குறித்து பல கட்ட போராட்டங்கள், பேச்சுவார்த்தைகள் என காலந்தாழ்ந்து கொண்டே சென்ற நிலைக்கு கடந்த மே 10ம் தேதி முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதில் சுமூகமான உடன்பாடு ஊதிய உயர்வு குறித்த நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதில் அனைவருக்கும் 6% ஊதிய உயர்வு, 10 ஆண்டு பணி முடித்த அனைவருக்கும் 3% Weightage 1.4.2022 முதல் நிலுவைத் தொகை இரு தவணையாக ஜுன் 2023 முதல் தவணை, ஜுன் 2024ல் இரண்டாவது தவணை 1.12.2019 முதல் 31.3.2023 வரை உள்ள காலத்திற்கு மாதம் ரூ. 500/- வீதம் கணக்கிட்டு இரு தவணைகளில் வழங்குவது, வேலைப்பளு ஒப்பந்தத்தை விரைவாக பேசி முடிப்பது, ஊதிய உயர்வுக்கான ஒப்பந்தம் செய்வது என முக்கிய முடிவுகளை சுமார் 5 மணி நேர பேச்சுவார்த்தைக்கு பின்னர் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

நல்ல தொரு முடிவினை எட்டிட பெருமுயற்சி எடுத்திட்ட வாரியத் தலைவர், இயக்குநர் பகிர்மானம், ஊதிய உயர்வு குழு தலைவர் இயக்குநர் (நிதி) மற்றும் வாரிய செயலாளர் ஆகியோருடன் பேச்சுவார்த்தைக் குழு உறுப்பினர்கள் MD(T) DG, CFC, CF(P) யாவருக்கும் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்!

கோரிக்கை பலவிதமாக இருந்தாலும் பன்முக சிந்தனையை ஒருமுகப்படுத்தி பிரதான கோரிக்கையாக வாரியத்தின் முன்வைத்து வெற்றியடைய செய்திருப்பது கூட்டுக்குழு நடவடிக்கையும் முயற்சியும் என்பதுதான் உண்மை.

தமிழக அரசின் அமைச்சர் பெருமக்களின் துறைகள் மாற்றப்பட்டிருக்கின்றன. குறிப்பாக நிதித்துறைக்கு செயலாளராக திருமிகு T. உதயசந்திரன் IAS அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள். வாழ்த்துகள்.

BP2, Internal Selection, Gangman Leave beneficial, JA பதவிக்கு 10ம் வகுப்பு கல்வித் தகுதி போன்று பல கோர்ப்புகள் கடந்த காலத்தில் ஒப்புதல் அளிக்காமல் உள்ளதை புதிதாக பொறுப்பேற்றிருக்கும் நிதித்துறை செயலாளர் செய்து தருவார் என்று நம்புகிறோம். ஏனெனில், பேரணி நடந்த அன்று நமது கோரிக்கைகள் உள்ள நியாயத்தை புரிந்து கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு

கொண்டு சென்றது மட்டுமல்ல மின்சாரத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்த்து வைப்போம் என உறுதியளித்தார் என்பதும் மேற்கண்ட யாவும் அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முதன்மை செயலாளர் I ஆக இருந்தபோது பேச்சுவார்த்தையில் கோரிக்கைகளை தெரிவித்தையும் நாம் நினைவு கூர்ந்து பார்க்கிறோம்.

அண்டை மாநிலமான கர்நாடகத்தில் புதிய ஆட்சி மலர்ந்துள்ளது. இந்த வெற்றி தேசம் முழுவதும் எதிரொலித்தால் 2025ல் மின்சார சட்டத் திருத்த மசோதாவை கைவிடக் கூடிய அளவிலான நல்லாட்சி மலரும் என நம்புறோம்.

தொலை நோக்கு பார்வையோடு பயணிக்கிறோம். தொழிலாளர் மத்தியில் அசைக்க முடியாத நம்பிக்கைக்குரிய சங்கமாக நாமும் வளர்ந்து வருகிறோம். அதற்குண்டான முக்கியத்துவத்தை அளிக்கக் கோரி மின்சார வாரியத்தையும், அரசையும் கேட்டுக் கொள்கிறோம். விரைந்து செய்வார்கள் என நம்புகிறோம்.

தனித்தனியாக வெற்றிக்கு காரணம் அவரவரும் தாங்கள்தான் என்று பரப்புரை மேற்கொண்டாலும் கூட்டு பேர சக்தியின் வலிமையும் 28.2.2023ல் நடைபெற்ற பேரணியின் தாக்கமும் அரசின் கவனத்திற்கு சென்றதின் விளைவாகத்தான் பேச்சுவார்த்தை மேஜையிலேயே 1.12.2019 முதல் மார்ச் 31.3.2023 வரையிலான காலத்திற்கு ரூ. 1000/- கேட்டு கோரிக்கை வைத்ததை ரூ. 500/- தர மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள் என்பதுதான் நிதர்சனம்.

உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமையை பறைசாற்றும் மே மாதத்தில் இப்பேச்சுவார்த்தை முடிந்திருப்பதும் ஒப்பந்தம் ஏற்பட இருப்பதும் அடுத்த கட்ட நகர்வுக்கு நம்மை அழைத்து செல்லும்.

ஒப்பந்தத் தொழிலாளர் நிரந்தரம், பகுதி நேர பணியாளர் பணியமர்த்தல், விடுபட்ட கேங்மேன் நியமனம், பணி செய்து வரும் கேங்மேன்களின் ஊர் மாறுதல் உத்தரவு, கேங்மேன்களுக்கு களஉதவியாளருக்குண்டான அடிப்படை சம்பளம், AE, TA, JA, FA, ASSR, Typist, ADMAN போன்ற பதவிகளில் நேரடி நியமனம், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பதவி உயர்வுகளை பெறுதல், Staff Nurse, Senior Draughtsmen to Head Draughtsmen, ADM Supervisor, Assistant Administrative Officer, Senior Administrative Officer ஆகியோருக்குண்டான ஊதிய முரண்பாட்டை களைதல், Redeployment, Outsourcing இல்லாத நிலை ஏற்படுத்துதல், பதவி உயர்வில்லாத LIகளுக்கு Super Numery Foreman பதவி பெறுதல், வேலைப்பளு பேசி முடிப்பதற்கான உத்தரவாதம், DA தமிழக அரசுப் பணியாளர்களுக்கு வழங்கும்போதே மின்சார வாரியத்தில் பணியாளர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் வழங்குதல் போன்றவற்றை முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு முன்னே பெற வேண்டியுள்ளது.

தனித்து இயக்கம், கூட்டம், போராட்டம் என்ற நிலை இருந்தாலும் சங்கங்களுக்குள் ஆயிரம் வித்தியாசங்கள் இருந்தாலும் பொது நன்மை கருதி கரம் கோர்த்து நின்றதுதான் ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்பட வழிகோலியுள்ளது.

ஒற்றுமை என்ற மிகப் பெரிய தேரின் வடத்தை இழுத்துப் பிடித்து செல்லும் கரங்களாக அனைவரும் ஒன்றிணைந்து தொடர்ந்து நிற்கிறோம் ஆயிரம் கை கொண்டு எப்படி ஆதவனை மறைக்க முடியாதோ அதுபோல எத்தனை சக்திகள் வந்தாலும் மின்சார வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு நடவடிக்கையை முடக்கிவிட முடியாது என்பதை நிரூபிக்கும் பெரும் பணியை சிரமேற்போம்.

தொழிலாளர், பொறியாளர், அலுவலர் நல்லுறவை வளர்ப்போம். நிர்வாகமும், தொழிற்சங்கங்களுடன் தொழில் நல்லுறவை தொடர்ந்து பேணட்டும்!

*''ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு; - நம்மில்*
*ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு''* **- மகாகவி பாரதி**

***- ஆசிரியர்***

## ‘‘தொழிலாளர் நலத்துறையின் சட்டமுன்வடிவு மீதான செயலாக்கம் நிறுத்தி வைப்பு’’ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு

**செய்தி வெளியீடு எண்: 761** நாள்: 26.04.2023

**தொ**ழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கக் கூடிய பல்வேறு அம்சங்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கடந்த 21.4.2023 அன்று ‘‘2023-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் B/2023)’’ தமிழ்நாட்டில் பெரும் முதலீடுகளை ஈர்த்திடவும், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினைப் பெருக்கிடவும், குறிப்பாக தென் மற்றும் வட மாவட்டங்களில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திடும் நோக்கிலும் தமிழ்நாடு அரசால் நிறைவேற்றப்பட்டது.

தொழிலாளர்களின் நவனைப் பாதுகாக்கக்கூடிய பல்வேறு அம்சங்கள் இச்சட்டத்தில் இருந்தாலும் சில தொழிற்சங்கங்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், தலைமைச் செயலகத்தில் இன்று (24.4.2023) மாண்புமிகு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை மேற்கொண்டனர்.

அந்த ஆலோசனைக் கூட்டத்தில் ‘‘2023-ம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண். 8/2023)’’ - என்ற சட்டமுன்வடிவின் முக்கியமான பிரிவுகளில் குறிப்பாக தொழிலாளர் நலன் சார்ந்து, அவர்கள் பணிபுரிவதற்கான உகந்த பணிச்சூழல், தொழிலாளர்களுக்குப் போக்குவரத்து வசதி உள்ளிட்ட தொழிலாளர் நலன்கள் குறித்தும், இச்சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் குறித்தும் விரிவாக தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறி, தமிழ்நாட்டில் உள்ள மிகச் சில குறிப்பிட்ட வகை தொழிற்சாலைகளுக்கு மட்டுமே நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் அரசின் பரிசீலனைக்குப் பின்பே பணி நேரம் குறித்த விதிவிலக்கு வழங்கப்படும் என்றும், எந்தச் சூழ்நிலையிலும், தொழிலாளர்களின் நலனில் சமரசம் செய்து கொள்ளப்படமாட்டாது என்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தெளிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி இளைஞர்களுக்கு நல்ல சம்பளத்துடன் கூடிய பல்லாயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் உள்ளிட்ட முக்கிய அம்சங்களைப் பற்றி மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு தொழிலாளர் நலன் காக்கப்பட வேண்டும் என்பதிலும் அதே அளவு அக்கறை கொண்டுள்ளது என்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எடுத்துக் கூறினார்கள்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள், இச்சட்டமுன்வடிவினை நடைமுறைப்படுத்தினால் தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய சிக்கல்கள், சிரமங்கள் குறித்து

விவரமாக எடுத்துரைத்து, தங்களுடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர்.

ஒரு நாட்டின் தொழில் வளம், பொருளாதார முன்னேற்றம் மற்றும் தொழில் அமைதி ஆகிய மூன்றும் ஒன்றையொன்று சார்ந்தவை. தொழில் முன்னேற்றத்தை ஊக்குவிக்கின்ற அதே நேரத்தில், தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பேணுவதும் அரசின் நோக்கமாகும். நாட்டில் தொழிற்சாலைகள் பெருகுவதற்கு அங்கு தொழில் அமைதி மிக அவசியமானது. தொழிலாளர் நலன் காக்கப்பட்டால்தான் தொழில் அமைதி நிலவும் என்பதை உணர்ந்து திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதெல்லாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறதோ, அப்போதெல்லாம் தொழிலாளர் நலன் பேணும் அரசாகவே செயல்பட்டு வந்துள்ளது. தற்போது அதே சிந்தனையைத் தாங்கி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வகுத்துத் தந்த பாதையில், அதன் அடியொற்றி இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

**திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதுமே தொழிலாளர் சமுதாயத்தின் தோழனாக, தொண்டனாக, காவல் அரணாக என்றென்றும் விளங்கும் என்பதற்கு கீழ்க்காணும் திட்டங்களே சான்றாகும்.**

1969-ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தொழிலாளர் நலனில் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக, ''தொழில் தொழிலாளர் நலம், கூட்டுறவு' என ஒன்றாக இருந்த மூன்று துறைகளிலிருந்து தொழிலாளர் நலனுக்கெனத் தனித்துறையையும், தனி அமைச்சகத்தையும் உருவாக்கியது.

இரத்தம் சிந்திப் போராடி, உயிர்த் தியாகம் செய்து, தொழிலாளர் சமுதாயம் பெற்ற உரிமைகள் குறித்த வரலாற்றை நினைவுபடுத்தும் வகையில், 1969ஆம் ஆண்டில் மே முதல் நாளைச் சம்பளத்தோடு கூடிய பொது விடுமுறை நாளாக அறிவித்துச் சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்தியது.

1969-ல் அவசரச் சட்டம் பிறப்பித்து விவசாயத் தொழிலாளர்க்கு நியாயமான கூலி வழங்க வகை செய்தது. பீடித் தொழில், பனியன் நெசவு, தோல் பதனிடும் தொழில், எண்ணெய் ஆலைகள், செங்கற் சூளை, உப்பளம் முதலியவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கப் பலம் இல்லாமையால் போதிய ஊதியம் வழங்கப்படாமல் அல்லல்பட்டு வந்த நிலைகண்டு அத்தொழிலாளர்களுக்குத் தொழில் முகவர்களிடம் பேசி, அவர்களுக்கெல்லாம் குறைந்தபட்ச ஊதியம் கிடைக்கச் செய்தது.

தொழிலாளர்கள் ஓய்வு பெறும்போது அரசு ஊழியர்களுக்கு உள்ளது போல் ''பணிக்கொடை'' வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தியது.

விபத்துகளால் பாதிக்கப்படும் தொழிலாளர்களின் குடும்பங்களைக் காப்பதற்காகத் தொழில்-விபத்து நிவாரண நிதித் திட்டத்தை உருவாக்கியது.

கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்துடன் விவசாயத் தொழிலாளர் நல வாரியம், மீனவர் நலவாரியம், விவசாயத் தொழிலாளர் நலவாரியம், மகளிர் நலவாரியம், மாற்றுத் திறனாளிகள் நலவாரியம், கிராமக் கோயில் பூசாரிகள் நலவாரியம், நரிக்குறவர் நலவாரியம், தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியம் உள்ளிட்ட 36 அமைச்சாரா நலவாரியங்களை உருவாக்கி உதவிகள் செய்தது தி.மு.க. அரசு.

1990ஆம் ஆண்டு மே தின நூற்றாண்டு விழாவையொட்டி, சென்னை நேப்பியர் பூங்காவிற்கு ''மேதினப் பூங்கா'' எனப் பெயரிட்டு, மே தின நினைவுச் சின்ந்ததை நிறுவியவர் கலைஞர்.

வேலைவாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது திமுக அரசுதான்.

முந்தைய கழக ஆட்சியின்போது, அகில இந்திய அளவில் ஒவ்வொரு மாநிலத்தின் வளர்ச்சியினை ஆராய்ந்து இந்திய தொழிற்குழுமம் (Confederation of Indian Industry) ஒரு அறிக்கை தயார் செய்தது. அந்த அறிக்கையில், இந்தியாவிலேயே தொழில் அமைதி நிலவுவதிலும், தொழிலாளர் நலன்களை பாதுகாப்பதிலும் தமிழகம் முதல் இடம் வகிக்கின்றது என்றும் குஜராத் இரண்டாவது இடம் என்றும் ஆந்திரப் பிரதேசம் மூன்றாவது இடம் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போதும், கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நிலவும் அமைதியான தொழிற்சூழலின் காரணமாகவே, தொடர்ச்சியாக பல்வேறு பன்னாட்டு மற்றும் இந்தியப் பெருந்தொழில் நிறுவனங்கள் முதலீடுகள் செய்து, அதன்மூலம் நமது இளைஞர்கள் புதிய வேலைவாய்ப்புகளைப் பெற்று வருகின்றனர்.

சுயமரியாதைச்சுடர் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, நல்லாட்சி தந்த நாயகராகவும், நற்றமிழ் வளர்த்த புரவலராகவும், சொல்லாலும், செயலாலும், எழுத்தாலும் தமிழ் வளர்த்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் முனைப்போடு செயல்பட்டு வரக்கூடிய இந்த அரசு ஒரு சட்டமுன்வடிவை எந்த அளவு உறுதியுடன் கொண்டு வருகின்றதோ, அது குறித்து மக்களிடம் ஏதேனும் மாற்றுக் கருத்துக்கள் வரப்பெற்றால், அவற்றைச் சீர்தூக்கி ஆராய்ந்து, அவர்களின் கருத்துக்களுக்கிணங்க, அவற்றிற்கு மதிப்பளிக்கும் வகையில் நடந்துகொள்வதிலும் அதே அளவு உறுதி காணப்பட வேண்டும்.

அந்த வகையில், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவின் மீது பல்வேறு தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், ''2023-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு - திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண். 8/2023''- என்ற சட்டமுன்வடிவின் மீதான மேல்நடவடிக்கை நிறுத்தி வைக்கப்படுகிறது.

வெளியீடு :

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,** சென்னை-9

# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்: 883** நாள்: 10.05.2023

**மா**ண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில்பாலாஜி அவர்கள் தமிழ்நாடு மின்உற்பத்தி பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 01.12.2019 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு குறித்து சங்கங்களின் பிரதிநிதிகளுடன் இறுதிகட்ட பேச்சுவார்த்தை நடத்தினர்.

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில்பாலாஜி அவர்கள் தமிழ்நாடு மின்உற்பத்தி பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 01.12.2019 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு குறித்து தொழிற்சங்கங்கள், பொறியாளர் கழகம் மற்றும் பொறியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் இன்று (10.05.2023) சென்னை தலைமை அலுவலகத்தில் இறுதிகட்ட பேச்சுவார்த்தை நடத்தினார்.

உடன் திமழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு) திரு. ரா. மணிவண்ணன், இயக்குநர் (பகிர்மானம்) திரு. மா. சிவலிங்கராஜன், இயக்குநர் (நிதி) (பொ) திருமதி. மலர்விழி, வாரிய செயலாளர் திரு. ஆ. மணிக்கண்ணன், கூடுதல் ஆணையர் (தொழிலாளர் நலன்) திருமதி. எம். சாந்தி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இதன் இறுதி கட்டமாக தொழிற்சங்க நிர்வாகிகள், பொறியாளர்கள் சங்கங்கள் மற்றும் இதர சங்க நிர்வாகிகள் 10.05.2023-ம் நாளன்று மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுடன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களின் முன்னிலையில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இறுதி கட்ட பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு எட்டப்பட்டது.

பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்க்ள செய்தியாளர்களிடம் பேசுகையில்,

01.12.2019 முதல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பணிபுரியக் கூடிய ஊழியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வு பேச்சுவார்த்தைக்கான குழு கடந்த ஆட்சியில் 07.12.2019ல் தான் அமைக்கப்பட்டது. அதன் பிறகு அந்த கூட்டம் தமிழ்நாட்டின் முதலமைச்சராக மாண்புமிகு தளபதி அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று இன்றோடு 8 முறை தொழிற்சங்க பிரதிநிதிகளை அழைத்து பேசி இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி, பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது.

ஊழியர்களுக்கும், அலுவலர்களுக்கும் 01.12.2019-ம் நாளன்று பெறும் ஊதியத்தில் ஆறு சதவிகிதம் (6%) ஊதிய உயர்வு.

01.12.2019-ம் நாளன்று, 10 வருடங்கள் பணி முடித்த ஊழியர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் பணி பலனாக (Service Weightage) 01.12.2019-ம் நாளன்று பெறும் ஊதியத்தில் 3 சதவிகிதம் (3%) ஊதிய உயர்வு.

ஊதிய உயர்வின் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 527.08/- கோடி கூடுதல் செலவாகும்.

இவ்வூதிய ஊயர்வு மூலம் ஏற்படும் நிலுவைத் தொகை 01.12.2019-ம் நாள் முதல் கருத்தியலாகக் (Notional) கணக்கிட்டு 01.04.2022ம் நாள் முதல் பணப் பலன்கள் வழங்கவும், 01.04.2022 முதல் 31.05.2023 வரை வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை இரண்டு தவணைகளாக வழங்கவும் முடிவு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. மொத்த நிலுவைத் தெகை ரூ. 516.71/- கோடி.

மேலும் 01.12.2019 முதல் 31.03.2022 வரையிலான 28 மாதத்திற்கான நிலுவைத் தொகையில் ஒவ்வொரு பணியாளருக்கும் குறைந்தபட்சம் தொகுக்கப்பட்ட நிலுவைத் தொகையாக ரூ. 500/-வீதம் கணக்கிட்டு இந்நிலுவைத் தொகையினை மேற்குறிப்பிட்டவாறு இரு தவணைகளாக வழங்கப்படும். இதற்காக ரூ. 106 கோடி கூடுதல் செலவாகும்.

ஊதிய உயர்வின் மூலம் பயன்பெறும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை 75,978.

10 வருடங்கள் பணி முடித்த ஊழியர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் பணி பலனாக (Service Weightage) 3 சதவிகிதம் (3%) ஊதிய உயர்வு மூலம் பயன்பெறும் பணியாளர்களின் எண்ணிக்கை 62.548.

வேலைப்பளு குறித்த ஒப்பந்தம் தொழிற்சங்கங்களுடன் பின்னர் பேசி முடிவு எடுக்கப்படும்.

மேற்காணும் முடிவினை அனைத்து தொழிற்சங்கங்களும் மனமகிழ்ச்சியுடன் ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

இவ்வாறு மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

## 10.5.2023 மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுடன் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு

**Secretariat Branch,**
N.P.K.R.R. Maaligai,
144, Annasalai,
Chennai - 2.

**Letter No. 52295/A16/A161/2019-36, Dated : 05.05.2023**

From
**Thiru. A. MANIKKANNAN,** M.A., B.L., M.B.A.,
Secretary / Convenor,
Wage Revision Committee.

To
**The General Secretary,**
1. Tamil Nadu Electricity Workers Federation
2. Tamil Nadu Electricity Board Accounts and Executive Staff Union.
3. Tamil Nadu Electricity Board Workers Progressive Union (LPF).

4. Central Organisation of Tamil Nadu Electricity Employees
5. Minsara Pirivu Anna Thozhir Sangam
6. Tamil Nadu Minvariya Janatha Thozhilalar Sangam
7. Tamil Nadu National Electricity Workers Federation (Xavier group)
8. Tamil Nadu Natiopnal Electricity Workers Federation (Swarnaraj group)
9. Tamil Nadu Electricity Board Engineers Sangam
10. Tamil Nadu Electricity Employees Congress
11. Tamil Nadu Electricity Board Thozhilalar Poriyalar Aykkiya Sangam
12. Tamil Nadu Electricity Board Engineers's Association
13. Tamil Nadu Electricity Board Finance & Accounts Officers Association
14. Bharathiya Electricity Employees Federation
15. Tamil Nadu Electricity Board Card Billing Staff Union
16. Tamil Nadu Electricity Board Dr. Ambedkar Employees Union
17. Tamil Nadu Electricity Board Engineers Union
18. Tamil Nadu Electricity Board Employees Federation
19. Tamil Nadu Electricity Board Paatali Thozhir Sangam

Sir,

Sub : TANGEDCO - Revision of Wages with effect from 01.12.2019 - Discussion with Unions/Associations - Date and Time - Intimation.

Ref :
1. (Per) CMD TANGEDCO Proceedings No. 224 (SB) dated : 07.12.2019.
2. SB Letter No. 52295/A16/A161/2019-5, dated 05.09.2022
3. SB Letter No. 52295/A16/A161/2019-12, dated 05.01.2023.
4. SB Letter No. 52295/A16/A161-2019-18, dated 20.01.2023.
5. SB Letter No. 52295/A16/A161/2019-24, dated 23.03.2023.
6. SB Letter No. 52295/A16/A161/2019-28, dated 27.03.2023
7. SB Letter No. 52295/A16/A161/2019-29, dated 05.04.2023.
8. SB Letter No. 52295/A16/A161/2019-33, dated 11.04.2023.

******

I am to invite your attention to the reference cited.

2. I am to inform that the Hon'ble Minister for Electricity, Prohibition and Excise/Government of Tamil Nadu has given his consent to have a discussion with your Unions/Associations in connection with the Wage Revision with effect from 01.12.2019 to the Employees/Officers of TANGEDCO on 10.05.2023 at 11.00 a.m in the Main Conference Hall, 6th Floor, TANTRANSCO Building.

3. I am also to request you to make it convenient to attend the meeting with not more than 2 representatives of your Unions/Associations.

Yours faithfully,
Asst. Board Sectt. Officer
for Secretary

# 10.5.2023 - ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை கோரிக்கைகள்

நாள் : 10.05.2023

பெறுநர்:

**மாண்புமிகு மின்துறை அமைச்சர்** அவர்கள்
தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

ஐயா,

**பொருள்** : ***மின்சார வாரியம் - 01.12.2019 முதல் ஊதிய உயர்வு - பேச்சுவார்த்தை - தொடர்பாக.***

**பார்வை** : **Letter No. 52295/A16/A161/2019-36 Dt. 05.05.2023.**

**மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கு வணக்கம்.**

1.12.2019 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு குறித்து வாரியத்தோடு பல முறைப் பேச்சுவார்த்தை நடந்துள்ளதை தொடர்ந்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மின்சார வாரியத்தோடு பலமுறை பேசப்பட்டதில் எங்கள் தரப்பிலிருந்து முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

**1) மின்சார வாரியத்தில் உள்ள 56,000 காலியிடங்களுக்கு உரிய பணியை சேர்த்து செய்துள்ளவர்களுக்கு 6% ஊதிய உயர்வு என்பது போதுமானதாக இல்லை. ஊதிய உயர்வு 20%ற்கு குறையாது அளித்திடல் வேண்டும். 01.12.2019 முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வுக்கான நிலுவைத் தொகையை ஒரே தவணையில் வழங்கிட வேண்டும்.**

**2) 10 ஆண்டுகளுக்கு ஒரு ஆண்டுயர்வு (Service Weightage) கேட்டுள்ள நிலையில் 20 ஆண்டுக்கு ஒரு ஆண்டுயர்வு என தெரிவித்திருப்பது வாரியத்தில் பணியாற்றி வரும் மூத்த தொழிலாளர்களுக்கு மட்டுமே கிடைக்கும் நிலை உருவாகும்.**

**எனவே, 10.08.2007 ஒப்பந்தத்தில் பணியேற்ற 20,000த்திற்கு மேற்பட்டோர், 20.02.2008 உத்தரவுப்படி 4000க்கு மேற்பட்டோர், 2009ஆம் ஆண்டு நேரடி ITI உதவியாளர் நியமனம் 4004, உதவி பொறியாளர் நேரடி நியமனம் மற்றும் வாரிசு பணிக்கு வந்துள்ளோர் என 30,000க்கு மேற்பட்டோரும் சேர்ந்து பயனடையும் வகையில் 10 ஆண்டுக்கு ஒரு ஆண்டுஉயர்வு அளித்திடல் வேண்டும்.**

**3) Class I to IV வரை உள்ள அனைவரும் இணைந்து பணியாற்றும் மிகப் பெரிய தொழில் மின்சாரத் தொழில், தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் என பிரித்து பார்க்க முடியாது. Class I & IIவில் பணியாற்றுபவர்களுக்கும் ஒவ்வொரு ஊதிய உயர்வு ஒப்பந்தத்தின் போதும் ஊதிய உயர்வு வழங்கப்பட்டு வரும் நிலை தொடர வேண்டும்.**

**4) Redeployment மற்றும் Outsourcing செய்திடல் கூடாது. குறிப்பாக ஓய்வு பெற்றவர்களை துணை மின்நிலைய பணிக்கு, கணக்கீட்டு பணிக்கு அமர்த்திடல் கூடாது.**

**5) பேச்சுவார்த்தையின் முடிவில் முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தும்போது தேங்கியுள்ள இதர பிரச்சினைகளுக்கு (கோரிக்கைகளுக்கு) தீர்வு காண கால அளவு நிர்ணயம் செய்து பேசிட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.**

**6) அகவிலைப்படி உயர்வு மத்திய அரசு அறிவித்து மாநில அரசுக்கு நீட்டிக்கும்போதே மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்களுக்கும், ஓய்வு பெற்றவர்களுக்கும் வழங்கப்படும் என ஒப்பந்தத்தில் ஷரத்து சேர்க்கப்பட வேண்டும்.**

(i) வேலைப்பளு ஒப்பந்தம் ஏற்படும் வரை பழைய ஒப்பந்தமே தொடர வேண்டும்.

(ii) Right Sizing of Man power என்ற புதிய யுக்தியில் புதிய பதவிகள் உருவாக்கப்படமாட்டாது என குறிப்பிடப்பட்டுள்ளது ஏற்படையதல்ல.

(iii) Allowances (படிகள்) குறித்து கமிட்டியில் பேசுவதற்கு பதிலாக ஊதிய உயர்வு ஒப்பந்தத்திலேயே முடிவு காண வேண்டும்.

7)

(i) செவிலியர்களுக்கு வழங்கப்படும் ஊதியமான ரூ. 21100-67100 என்பதை மாற்றி G.O. Ms. No. 303, Dt. 11.10.2017ன்படி 36000-114000 தருவதற்காக (Per) FB. TANGEDCO Per No. 9 (SB) Dt. 02.03.2018ல் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதை அமல்படுத்தி அரசு செவிலியருக்கு இணையான ஊதியம் வழங்கிடல் வேண்டும். (3 செவிலியர்கள் மட்டுமே உள்ளனர்)

(ii) Senior Draughtsmen & Head Draughtsmen இரு பதவிகளும் தர ஊதிய வேறுபாடு ரூ. 100 மட்டுமே உள்ளது. Senior Draughtsmen - 9600 - 34800 + 4300
Head Draughtsmen - 9600-34800 + 4400
அரசுத்துறையில் Drafting Officer பதவிக்கு Grade வழங்கப்படும். ரூ. 5100ஐ G.O 303/ 22.7.2013ன்படி வழங்கப்பட்டதை தொடர்ந்து கேட்டு வருவது தரப்படாமல் உள்ளது. அரசுத் துறையில் உள்ள Grade Pay Head Draughtsmen பணியாளர்களுக்கு 5100 வழங்கிட வேண்டுகிறோம்.

(iii) Administrative Branch (8th Floor) Staffsக்கும் Secretariat Branch (9th Floor) Staffsக்கும் உள்ள ஊதியம் போல Regional Administrative Staffsக்கும் வழங்கிட ஊதியத்தில் உள்ள வேறுபாட்டை சரிசெய்திட வேண்டுகிறோம். Section Officer, Superindent பதவிகளுக்கு சமமாக Adm Supervisorக்கு ஊதியம் அளித்திட வேண்டும். Under Secretary, Personel Officer பதவிகளுக்கு சமமாக Administrative Officerக்கு ஊதியம் அளித்திட வேண்டும். Debuty Secretary Senior Personal Officer பதவிகளுக்கு சமமாக Senior Administrative Officerக்கு ஊதியம் அளித்திட வேண்டும்.

8) Field Assistant, Junior Assistant, Typist, Assistant Draughtsmen, Technical Assistant, Assistant Engineer காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிடல் வேண்டும். (நேர்முகத் தேர்வுக்கு அரசின் ஒப்புதலுக்கு சென்றுள்ள பதவிகளின் பட்டியலில் Assistant Draughtsmen மற்றும் Typist ஆகிய பதவிகளுக்கும் அரசிடம் ஒப்புதல் பெற்று தேர்வு செய்திட வேண்டுகிறோம்.

9) (i) தேர்வு செய்து வைத்துள்ள 5000 Gangmanகளை உடனடியாக நியமித்திட வேண்டும் (3 மாத பயிற்சி பின்னர் Field Assistant ஆக பணியமர்த்திட வேண்டும்)

(ii) Gangman பதவிகளை களஉதவியாளர்களாக மாற்றிட வேண்டும்.

(iii) Gangman பணியாளர்களின் ஊர் மாறுதல் விண்ணப்பங்களை ஏற்று சொந்த ஊருக்கு முதன்மை பட்டியல் மாறாது ஊர் மாறுதல் செய்திடல் வேண்டும்.

10) (i) விடுபட்ட ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய அடையாளம் காணும் உத்தரவு BP 9 நாள்: 9.1.2008ஐ மீண்டும் அனுமதிக்க வேண்டும்.

(ii) ஒப்பந்த தொழிலாளர்களை மின்சார வாரியமே நேரடியாக பணிக்கமர்த்திக் கொள்ள வேண்டும். PWD Schedule of rate ரூ. 485/- ஊதியம் வழங்கிட வேண்டும்.

(iii) IOL உத்தரவு மற்றும் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ள ஒப்பந்த தொழிலாளர் நிரந்தரத்திற்கான உத்திரவுகளை மேல்முறையீடு செய்யாது பணி வழங்கிடல் வேண்டும்.

(v) ஒப்பந்த தொழிலாளர்கள் பணி செய்து நிரந்தரப்படுத்தப்படாமல் உள்ளதை நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மின்திட்டங்களில் மேற்பார்வை பொறியாளர்கள் பரிந்துரை

செய்துள்ளதை கவனத்தில் கொண்டு இதுபோல் மின்சார வாரியத்திலுள்ள அனைத்து திட்டங்களிலும் உள்ளவர்களை நிரந்தரப்படுத்திடல் வேண்டும்.

11) பகுதி நேரப் பணியாளர்கள் இல்லாத அலுவலகங்களில் ஊதியமின்றி பணி செய்து வரும் சுமார் 1000 பெண்களுக்கும் பணி வழங்கிட வேண்டுகிறோம். இதுகுறித்து வாரியத்தால் 09.06.2017 தேதியிட்டு மேற்பார்வை பொறியாளர்களிடமிருந்து பெறப்பட்ட பட்டியலில் உள்ளவர்களை பணி நிரந்தரம் செய்திட வேண்டுகிறோம்.

12) (i) Tech Asst, Assistant Engineer, Store custodian II Grade and Junior Assistant (Adm & Accounts) ஆகிய பதவிகளுக்கு உடனடியாக உள்முகத் தேர்வு செய்திட வேண்டுகிறோம்.

(ii) உள்முகத் தேர்வு அனுமதிப்பதற்கு உருவாக்கி உள்ள Cut off Date (7.6.2022)ஐ நீக்கி உள்முகத் தேர்வில் தொடர்ந்து அனுமதித்திட வேண்டுகிறோம்.

(iii) இளநிலை உதவியாளருக்கு இளங்கலை பட்ட படிப்பு முடித்திருக்க வேண்டும் என்று மின்சார வாரியம் மாற்றியுள்ளதை அரசுத் துறையில் உள்ளதுபோல 10ம் வகுப்பு கல்வித் தகுதி போதுமானது என்று உத்திரவிட்டு Junior Assistant Open Recuritment, Internal selection, வாரிசு வேலை அளித்தல்போன்றவைகளை நடைமுறைப்படுத்திட வேண்டுகிறோம்.

13) (i) புதிதாக உருவாக்கப்பட்டுள்ள CE அலுவலக Senior Adm Officer பதவி அனுமதித்திட வேண்டும்.

(ii) Chief Head Draughtsmen அனுமதிக்காமல் உள்ள SE அலுவலகங்களுக்கு அனுமதித்திட வேண்டும்.

(iii) பதவி உயர்வில்லாத மின்பாதை ஆய்வாளர்களுக்கு மிகை ஆக்க முகவர் முதல் நிலை (Supernumery Foreman) வழங்கிட வேண்டும்.

(iv) களப்பிரிவு பணியில் சிறப்பு நிலை முகவருக்கு மேல் பதவி உயர்வாக Field Technical Officer (or) Assistant என்ற பதவி வழங்கிட வேண்டும்.

(v) Rural Sub Divisionல் ஒரு சிறப்பு நிலை ஆக்கமுகவர் என்பதை கிராமிய பிரிவு அலுவலகங்கள் (Rural Section) அனைத்திலும் சிறப்பு நிலை ஆக்க முகவர் பதவி உயர்வு வழங்கிட வேண்டும்.

14) மூன்று வருடத்திற்குள் 18 வயது நிரம்பியிருக்க வேண்டும், 3 வருடத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்ற விதிகளால் வாரிசு வேலை கிடைக்காது உள்ளவர்களுக்கும், மாநில எல்லையோரங்களில் வாழும் மின்சாரப் பணியாளர்கள் இறக்க நேர்ந்தால் பிள்ளைகள் தமிழ் படிக்கவில்லை என கூறி வாரிசு வேலை மறுக்கப்பட்டவர்களுக்கும் மேலும் வாரிசு வேலை அளிக்காமல் பல்வேறு காரணங்களால் கிடப்பில் உள்ள விண்ணப்பங்களை பரிசீலித்து வாரியத்திற்காக உழைத்து உயிரிழந்த குடும்பங்களின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கிட வேண்டுகிறோம்.

சிறந்த ஊதிய உயர்வுடன் இதர கோரிக்கைகளும் நிறைவேற்றப்படக் கூடிய அளவில் முத்தரப்பு ஒப்பந்தம் ஏற்படுத்திட **மாண்புமிகு மின்துறை அமைச்சர்** அவர்கள் மின்சார வாரியத்திற்கு இப்பேச்சுவார்த்தை மூலம் ஆலோசனை வழங்கிடுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

## தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு

நாள் : 12.04.2023

பெறுநர்:

**செயலாளர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : நிர்வாகம் - ஊதிய உயர்வு குறித்த வாரியத்தின் இறுதி முன்வடிவு வழங்கியது - பிரதானமான விஷயங்கள் குறித்து மறுபரிசீலனை செய்திடக் கோருவது - சமூக ஒப்பந்தம் காண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுவது தொடர்பாக.**

**பார்வை : கடித எண்: 52295/A-16/A-161/2019-33 நாள்:** *11.04.2023.*

தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களுக்கும் மின்வாரிய நிர்வாகத்திற்கும் கடந்த 01.12.2019 முதல் நடைமுறைக்கு வரவேண்டிய ஊதிய உயர்வு குறித்து பேச்சுவார்த்தையின் போது பெரும்பான்மையான தொழிற்சங்கங்களால் வலியுறுத்தப்பட்ட கீழ்கண்ட பிரதானமான விஷயங்களில் உரிய முடிவுகள் எடுத்திடாமல் பார்வையில் கண்ட கடிதத்தின் வாயிலாக இறுதி முன்வடிவு என்று வழங்கியிருப்பது தொழிலாளர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது. எனவே, மின்வாரிய நிர்வாகம் கீழ்க்கண்ட விஷயங்கள் குறித்து மறுபரிசீலனை செய்து சுமூகமான முறையில் ஒப்பந்தம் கண்டிட உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

முதலில் இது இறுதிப்படுத்தப்பட்ட கருத்துரு எனக் குறிப்பிட்டது தவறு என சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

**1) ஊதியம்**

01.12.19 முதல் 6 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கப்படும் என்ற வாரியத்தின் நிலைபாட்டில் மாற்றம் கண்டு கூடுதலான சதவிகிதம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 01.12.2019 முதல் ஊதிய உயர்வு நிலுவைத்தொகை ரொக்கமாக வழங்கப்பட வேண்டும்.

**2) சர்வீஸ் வெயிட்டேஜ்**

கடுமையான வேலைச்சுமைகளை ஏற்று மக்களுக்கு சிறப்பான சேவையாற்றி அரசுக்கு நற்பெயர் உருவாக்கிடும் வகையில் உழைத்து வரும் பெருவாரியான தொழிலாளர்களை திருப்தி ஏற்படுத்திடும் வகையில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய அனைத்து தொழிலாளர்களுக்கும், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் சர்வீஸ் வெயிட்டேஜ் ஆக ஒரு ஆண்டு உயர்வு வழங்கப்பட வேண்டும்.

மேலும் கடந்த 27.03.2023 அன்று கொடுக்கப்பட்ட முன்வடிவில் சர்வீஸ் வெயிட்டேஜ் என்பது அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவித்துவிட்டு தற்போது வழங்கியுள்ள முன்வடிவில் அலுவலர்களுக்கு இல்லை என்று முரண்பாடாக

கொடுக்கப்பட்டுள்ளது. அலுவலர்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்கி உள்ளது. எனவே, ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவின்படி அனைத்து அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் ஒரு ஆண்டுயர்வு சர்வீஸ் வெயிட்டேஜ் என்பதை உத்திரவாதப்படுத்திட வேண்டும்.

**3) வேலைப்பளு**

வேலைப்பளு குறித்த முன்வடிவில் பத்தி இரண்டை முழுமையாக நீக்கிட வேண்டும். ஏற்கனவே 22.02.2018-ல் ஏற்பட்ட ஒப்பந்தப்படி அனுமதிக்க வேண்டிய பதவிகளை அனுமதித்து நிரப்பிட வேண்டும். மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கண்ணியமான வேலைத்தன்மை (Decent Work) என்பதை உத்திரவாதப்படுத்திட வேண்டும் என்பதோடு, அவுட் சோர்சிங் மற்றும் ரைட்சைசிங் என்ற பெயில் புகுத்திடக் கூடிய எத்தகைய திட்டங்களையும் ஏற்க இயலாது.

**4) படிகள் தொடர்பாக**

கடந்த காலங்களில் ஊதிய உயர்வு ஒப்பந்தத்திலேயே படிகள் சம்மந்தமாக முடிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் காணப்படும். வீட்டு வாடகை மற்றும் நகர ஈட்டுப்படியை தவிர அனைத்துப்படிகளும் உயர்த்தி அளிக்கப்பட வேண்டும். இதற்காக கமிட்டி நியமித்து முடிவு காண்பது என்பது சரியல்ல என்பதை சுட்டிக்காட்டிட விரும்புகிறோம்.

மேலும் பஞ்சப்படி குறித்து மாநில அரசு அறிவிக்கின்ற பொழுதே மின்வாரியப் பணியாளர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் அளிக்கப்படும் என்ற ஷரத்து சேர்க்கப்பட வேண்டும்.

**6) அலுவலர்களுக்கான ஊதிய உயர்வுக்கான காலக்கெடு குறித்து**

மின்வாரியத்தில் பணியாற்றுகின்ற பொறியாளர், அலுவலர், தொழிலாளர் என பிரித்துப் பார்க்க முடியாது. அனைவரும் இணைந்து பணியாற்றி வருகின்ற காரணத்தினால்தான் வாரியம் வளர்ச்சி அடைந்துள்ளது. இதுவரை ஏற்பட்ட 11 ஒப்பந்தங்களிலும் பொறியாளர் தொழிலாளர் பாகுபாடு இன்றி அனைவருக்கும் ஒரே சதவிகிதத்தின் அடிப்படையில் ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இத்தகைய மரபுகளை மீறாமல் வரும் காலங்களிலும் கடந்த கால நடைமுறைகளே தொடர வேண்டும்.

மின்வாரியப் பணியாளர்களின் பணிநிலை, காலிப்பணியிடங்கள் அதனால் ஏற்படுகிற கூடுதல் பணிச்சுமை இவைகளை பொருட்படுத்தாமல் கடுமையான கொரோனா நோய்த் தொற்று காலத்திலும் தடையற்ற மின்சாரம் வழங்கி மக்களை பாதுகாத்ததிலும், விவசாயிகளுக்கு ஒன்றரை லட்சம் விவசாய மின்இணைப்புகளை அரசு நிர்ணயித்த காலக்கெடுவுக்குள் வழங்கி அரசுக்கு பெருமை சேர்த்தவர்கள் மின்வாரிய பணியாளர்கள் என்பதை கணக்கில் கொண்டு தொழில் அமைதியை ஏற்படுத்திட எங்கள் கருத்துக்களை உள்வாங்கி முழுமையான ஒப்பந்த வரைவு நகலை வழங்கி அதன்மீது விவாதித்து சுமூகத்தீர்வு கண்டு அனைவரும் ஏற்றுக்கொள்கின்ற வகையில் ஒப்பந்தம் காணப்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு**

## ஊதிய உயர்வு - வாரிய முன்வரைவு - நமது கருத்துகள்

நாள் : 12.04.2023

பெறுநர்:

**செயலாளர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

*பொருள்* : *ஊதிய உயர்வு 1.12.2019 முதல் - பேச்சுவார்த்தை தொடர்பாக.*

*பார்வை* : **Letter No. 52295/A16/A161/2019-33 dated : 11.4.2023.**

பார்வையில் கண்டுள்ளபடி அனுப்பப்பட்டுள்ள ஊதிய உயர்வுக்கான முன்வரைவு Final Proposal என குறிப்பிடப்பட்டுள்ளது. மின்சார வாரியத்தில் நடைபெற்று கொண்டு இருக்கும் பேச்சுவார்த்தை நிலுவையில் இருக்கும்போது Final Proposal என்று குறிப்பிட்டுள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், தொடர்ச்சியாக பேச வேண்டியதுள்ளது என்றும் தங்களின் மேலான கவனத்திற்கு தெரிவிப்பதுடன் மேற்கண்ட முன்வரைவின் மீது எங்களின் கருத்துக்களை தங்களின் பார்வைக்கு கொண்டு வருகிறோம்.

### PAY

1.12.2019 முதல் 20 சதவீத ஊதிய உயர்வுடன் நிலுவைத் தொகை கணக்கிட்டு ஒரே தவணையில் ரொக்கமாக வழங்கிட வேண்டும்.

### Dearness Allowance

The revised Dearness Allowance will be sanctioned to the employees of TANGEDCO as granted by the State Government to their employees at the same rate and from the same date என்ற ஷரத்து சேர்க்கப்பட வேண்டும்.

### Service Weightage

பத்து ஆண்டு பணி முடித்த அனைவருக்கும் (Class I to IV) சர்வீஸ் வெயிட்டேஜ் 3 சதவீதம் ஒரு ஆண்டுயர்வு வழங்கப்பட வேண்டும்.

### Workload

முன்வரைவில் கண்டுள்ள 3 கருத்துகளில் முதல் கருத்து நீங்கலாக 2 மற்றும் 3ஐ நீக்கிட வேண்டும்.

### Revision of HRA, CCA, Special Pay and other Allowances

2வது பத்தியில் காணப்பட்டுள்ள, Revision of other allowances, கமிட்டி அமைத்து முடிவெடுப்பது என்பதை நீக்கிட வேண்டும். ஊதிய உயர்வு பேச்சுவார்த்தையின் போதே, இரட்டிப்பாக வழங்கிட வேண்டும்.

### The Frequency of wage Revision for Officers

மின்சார வாரியத்தில், கடந்த காலங்களில் ஊதிய உயர்வு வழங்கியது போலவே, Class I & IIல் பணிபுரிபவர்களுக்கு, ஒவ்வொரு ஒப்பந்த காலத்திலும், ஊதிய உயர்வு தொடர்ந்து வழங்கிட

வேண்டும். எனவே, இந்த முன்வரைவில் குறிப்பிடப்பட்டுள்ள, However the wage revision for Class I & II officers shall be considered only on Par of the State Government Officials in future என்ற ஷரத்து நீக்கப்பட வேண்டும்.

**Fixation**

2) The Monitery Benefit will take effect from 1.4.2022 என்பதை 1.12.2019 என மாற்றிட வேண்டும்.

3) 1.12.2019 முதல் நிலுவைத் தொகையை 100 சதவீதம் ரொக்கமாக ஒரே தவணையில் வழங்கிட வேண்டும்.

**Remarks**

ஊதிய உயர்வு தொடர்பாக எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சார்பாக கொடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு தீர்வையும் உள்ளடக்கி முழுமையான முன்வரைவு வழங்கி பேச்சுவார்த்தை நடத்தி குறிப்பாக அடிப்படை காலிப் பணியிடங்களை (அரசுக்கு சென்றுள்ள 10200 பதவிகளுடன் (உதவி வரைவாளர் உட்பட) பூர்த்தி செய்தல், ஒப்பந்தத் தொழிலாளர் நிரந்தரம், பகுதி நேர பணியாளர் நிரந்தரம், தேர்வு செய்யப்பட்ட 5000 கேங்மேன் நியமனம், BP2 ரத்து செய்தல், பதவி உயர்வு இல்லாத மின்பாதை ஆய்வாளருக்கு மிகைநிலை ஆக்க முகவர் பதவி வழங்குதல், தலைமை வரைவாளர், Staff Nurse ஆகியோருக்கு ஊதிய பாகுபாட்டை நீக்குதல், Adm Supervisor, AADO, ADMO, Senior ADMO, ஆகியோர்களுக்கான ஊதியம் முறையே Superindent / Section Officer / Assistant Personnel Officer / Personnel Officer / Senior Personnel Officerக்குண்டான ஊதியத்தை வழங்குதல் கேங்மேன் பணியாளர்களை களஉதவியாளராக மாற்றுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை தீர்வு காணும் வகையில், முழுமையான முன்வரைவு கொடுத்து, பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தம் ஏற்படுத்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

## உணவே மருந்து...

**அற்றால் அறவறிந்து உண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.**

*- குறள்*



துரித வாழ்வின் நெரிசலில் ‘‘எந்த பொத்தானை எதற்கு அமுக்க வேண்டும்? என் ஒரே பாடத்தை எல்லாம் உயர்ந்த படிப்பிலும் பயிற்சியிலும் படிக்கத் துவங்க, பெரிதாகப் பெற்ற அறிவில் இன்று நாம் தொலைத்தவையும் இழந்தவையும் ஏராளமானவை. அப்படி நாம் தொலைத்தவையும் இழந்தவையும்

கொடுத்துதான் இந்த சர்க்கரை, ரத்தகொதிப்பு, ரத்தகொழுப்பு, மாரடைப்பு, புற்றுநோய், மன இறுக்க நோய்கள் முதலான தொற்றா நோய் கூட்டத்தின் (Non coimmunicable Diseases) துவக்கப்புள்ளிகள்.

கொஞ்சம் மெனக்கெடலும், சமையலறையில் கூடுதல் கரிசனமும் முறையான மருத்துவத்துடன் சேர்ந்து இருந்தால் மட்டுமே இந்த நோய்க்கூட்டத்தில் இருந்தும் அந்த நோய்க்கான மருந்து/ மருத்துவர் கூட்டத்தில் இருந்தும் தப்பிக்கலாம்.

உணவு ஒரு மாபெரும் வணிகச்சந்தைக்கான களமாக ஆன பின்னர், அதன் அத்தனை கூறுகளும் வேக வேகமாக சிதைக்கப்பட்டு வருகின்றன. உணவுக் கட்டமைப்பை கைப்பற்றுவதன் மூலம் ஓர் அரசைக் கட்டுப்படுத்த முடியும், அதன் இறையாண்மையை சிதைக்க முடியும் என்பது வளர்ந்த நாடுகளின் போர் அணுகு முறையாகவும் கூட ஆகிவிட்டது.

இன்னொருபுறம், வணிக சிந்தனையை மட்டுமே அடித்தளமாகக் கொண்டு மருத்துவ உலகம் உணவுக் கலாச்சாரத்தைச் சிதைப்பதும், அதற்கு உதவியாக தவறான தகவல்கள் மூலமும் வணிக திட்டங்கள் மூலமும் மருத்துவ உலகை வசப்படுத்தி மக்களை திசை திருப்பும் வேலையும் வேக வேகமாக நடைபெற்று வருகின்றன.

காலகாலமாக நம்மிடையே உள்ள அரிசி பழிக்கப்படுவதும், தேங்காய் எண்ணெய் குற்றம் சாட்டப்படுவதும் இந்த காரணங்களால் தான். ரெடிமேட் உணவுகளின் பிடியில் ஒவ்வொரு வீடும் கட்டுவதற்கு மருத்துவகாரணமும், மேற்கத்திய தரமும் மிக உறுதியான காரணங்களாக தொடர்ந்து போதிக்கப்படுகின்றன. இந்தச் சூழலில் நம் பாரம்பரிய உணவு குறித்த விழிப்புணர்வு மிக அவசியமானது. அவற்றை மீட்டெடுக்க வேண்டியதும் இன்றியமையாதது.

**நீரழிவு நோய்க்கான உணவு**

இனிப்பு மற்றும் பாலிஷ் செய்யப்பட்ட தானியங்களின் அதிகப்படியான உபயோகம், உணவு பண்பாட்டில் நடக்கும் ஒழுங்கின்மை மன அழுத்தம், உடல் உழைப்பு குறைவு இவைதாம் இன்றளவில் நீரழிவு வர முக்கிய காரணங்கள்.

சர்க்கரையின் முதல் எதிரியாக சித்தரிக்கப்படுவது அரிசி அதில் பெரும் உண்மையில்லை. இயற்கையில் விளைந்த பாரம்பரிய கைக்குத்தல் அரிசி ரகங்கள் பெரும்பாலும் குறைந்த கிளைசிமிக் தன்மை உடையன. வேகமாக ரத்தத்தில் சர்க்கரையை சேர்க்காதவை. பட்டை தீட்டிய வெள்ளை நிற சில்க்கி பாலிஷ் போட்டு விற்பனை செய்யும் உணவை தவிர்த்திடுங்கள்.

தரைக்கு அடியில் விளையும் கிழங்குகள், குறிப்பாக உருளைக்கிழங்கு தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. கேரட்டும், பீட்ரூட்டும் தவிர்த்திடுங்கள். கோவைக்காய், கத்திரிக்காய், அவரை பிஞ்சு, வெண்டைக்காய், கொத்தவரங்காய், டபுள்பீன்ஸ், வாழைத்தண்டு, வாழைப்பூ, சுண்டை வற்றல், முருங்கைக்கீரை, கொத்தமல்லி, புதினா இவை எல்லாம் சர்க்கரை நோயாளிக்கு மிகுந்த நல்ல பலன் அளிக்கக் கூடியவை. பாகற்காய் சர்க்கரை நோயாளியின் சிறந்த நண்பன்.

நாருள்ள இனிப்பு குறைவாகவும், துவர்ப்பு அதிகமாகவும் உள்ள பழங்கள் தினசரி சாப்பிடுவது நல்லது. மாம்பழம், சப்போட்டா, மோரிஸ் வாழைப்பழம், துவர்ப்புள்ளி நம்மூர் மாளை, இளம்பழுப்பில் உள்ள கொய்யா, தோலுடன் உள்ள ஆப்பிள், நாவல் போன்ற பழங்கள் சர்க்கரை நோயாளிகளுக்கு நல்ல பலன் அளிக்கக் கூடியவை.

**இந்து ராஜேஷ்குமார்**
தலைமைப் பொறியாளர் அலுவலகம் பகிர்மானம்
கோவை மண்டலம், கோவை

## நான்மணிக்கடிகை பாடல். 11 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

### நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்!

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்;
குளத்துக் கணியென்ப தாமரை; பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணியாம்
தான்செல் உலகத் தறம்.

**சந்தி பிரித்து எழுதிய பாடல்:**

நிலத்துக்கு அணியென்ப நெல்லும் கரும்பும்;
குளத்துக்கு அணியென்ப தாமரை; பெண்மை
நலத்துக்கு அணியென்ப நாணம், தனக்கு அணியாம்
தான்செல் உலகத்து அறம்.

**கருத்துரை :**

பச்சைப் பசேலென்று காணப்படும் நெற்பயிரும், கரும்பின் பயிரும் வயலுக்கு அழகென்று உலகத்தார் சொல்வார்கள்!

தாமரைக் கொடியும் இலையும் மலரும் நிறைந்து இருக்கும் கண் கொள்ளாக் காட்சியே குளத்திற்கு அழகு என்றும் உலகத்தார் சொல்வார்கள்!

